# திருகுர்ஆன் கூறும் மண்ணறை (திரை) வாழ்க்கை

H. சிராஜ் நிஷா, கோப்புத்துறை

மறுமையில் வழங்கப்படும் தண்டனையைத் தவிர வேறு தண்டனை இருப்பதாக, குர்ஆனில் கூறப்படவில்லை என்ற இவர்களின் அறியாமையின் வெளிப்பாடுதான் கப்ருடைய வேதனை என்ற வார்த்தை தான் குர்ஆனில் கூறப்படவில்லை. அத்தகைய வேதனை உள்ளது பற்றி வேறு வார்த்தைகளால் கூறப்பட்டுள்ளது. இதை அறியாத காரணத்தினால்தான் இவ்வாறு வாதிடுகின்றனர்.

“அவர்கள் எழுப்பப்படும் நாள் வரையும் அவர்களுக்குப் பின்னைல் திரை (பர்ஸக்) உள்ளது”. அல்குர்ஆன் 23:100

மனிதன் இறந்த பின்னால் மறுமை நாள் ஏற்படும் வரை இம்மைக்கும், மறுமைக்கும் இடையில் ஒரு வாழ்க்கை உண்டு என்று மேற்கண்ட வசனம் கூறுகிறது. இந்த வசனத்திற்கு விளக்கமாகத்தான் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கப்ர் வாழ்க்கையைப்பற்றி கூறியுள்ளார்கள். இந்த கப்ர் வாழ்க்கையின் போது நல்லடியார்கள் உறங்குவார்கள் என்பதும், கெட்டவர்கள் வேதனை செய்யப்ப டுவார்கள் என்று கூறியுள்ளார்கள்.

நரகம் எடுத்துக்காட்டப்படும் மண்ணறைகளை சந்திக்கும் வரை அதிகமாக தேடுவது, உங்கள் கவனத்தை திருப்பி விட்டது. அவ்வாறில்லை அறிவீர்கள் பின்னர் மீண்டும் அறிவீர்கள். அவ்வாறில்லை நீங்கள் உறுதியாக அறிவீர்களானால், நரகத்தைக் காண்பீர்கள் கப்ரு பின்னர் மிக உறுதியாக அதை காண்பீர்கள்; அந்நாளில் அருட்கொடைப் பற்றி விசாரிக்கப்படுவீர்கள். அல்குர்ஆன் 102:1–8

பேராசை மனிதனை அழித்து விடக்கூடியது என்பதையும் கப்ரை சென்றடையும் வரை அவனுக்கு இந்தப் பேராசை இருக்கும் என்பதையும் கூறிவிட்டு பேராசையின் விளைவை கப்ருக்கு சென்ற பின் மனிதன் அறிந்து கொள்வான் என இந்த வசனம் கூறுகிறது.

அத்துடன் இரண்டு முறை, அறிந்து கொள்வான் என்றும் கூறுகிறது. அவ்வாறில்லை, அறிவீர்கள் பின்னர் மீண்டும் அறிவீர்கள் என்ற வாசகத்திலிருந்து இதை விளங்கலாம்.

முதல் முறை கப்ரில் வேதனையைக் காணும் போது அறிவீர்கள். அதன் பின்பு மறுமையிம் அறிவீர்கள் என்று கப்ரு வாழ்க்கை ஒன்று இருப்பதை எவ்வளவு அழகாக அல்லாஹ் இந்த வசனத்தில் கூறுகிறான்.

மறுமை வாழ்க்கை குறித்து கூறுவதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இவ்வாறு இரு முறை இறைவன் கூறுகிறான் என்று எவரும் சொல்லலாம். ஒரே வாசகம் இங்கு இருமுறை சொல்லப்படவில்லை அறிவீர்கள். அதன் பின்பு, மீண்டும் அறிவீர்கள் என்று அதன் பின்பு என்ற வாசகம் அதிகமாக இடம் பெற்றுள்ளதை கவனிக்க வேண்டும். அந்த வாசகம் கப்ரில் வேதனையைக்

காணும் போது முதலில் அறிவான். அதன் பின்பு மறுமையில் ஒரு முறை அறிவான் என்பதையே உணர்த்துகிறது. அது மட்டுமல்லாமல் அடுத்த வசனம் நீங்கள் நரகத்தை காண்பீர்கள் என்று மற்றொரு முறை நரகத்தை காண்பீர்கள் என்று கூறுகிறது.

மனிதன் கப்ரில் வைக்கப்பட்ட பிறகு நரகம் அவனுக்கு எடுத்துக் காட்டப்படுகிறது. அதை அவன் பார்ப்பான் என்பதை முதல் வசனமும் பிறகு மறுமையில் உண்மையாகவே, நேரடியாக நரகைக் காண்பான் என்பதை அடுத்த வசனமும் கூறுவதை யாரும் விளக்கம் செல்லாமலேயே விளங்கலாம். இது சுய விளக்கமல்ல. கப்ரில் நரகம் எடுத்துக்காட்டப்படும் என்பதை பின்வரும் வசனம் தெளிவாக கப்ரு வேதனை குறித்து விளக்கமளிக்கிறது.

ஆகவே, அவர்கள் திட்டமிட்ட தீமைகளை விட்டும் அல்லாஹ் அவரைக் காத்துக்கொண்டான். மேம் வேதனையின் கேடு ஃபிர்அவ்னின் கூட்டத்தாரைச் சூழ்ந்து கொண்டது.

''காலையிம், மாலையிம் அவர்கள் நரக நெருப்பின் முன் கொண்டு வரப்படுவார்கள்; மேம் நியாயத் தீர்ப்பு காலம் நிலை பெற்றிருக்கும் நாளில் ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாரை கடினமான வேதனையில் புகுத்துங்கள்'' (என்று கூறப்படும்). அல்குர்ஆன் 40:46

கியாம நாள் வருவதற்கு முன் ஃபிர்அவ்னுடைய கூட்டத்தினர் நரக நெருப்பின் முன்னால் காலையி-ம், மாலையிம் அதாவது தினந்தோறும் காட்டப்படுகிறார்கள் என்று இவ்வசனங்கள் கூறுகின்றனர். நரக நெருப்பின் முன் கொண்டு வருவது வேதனையின் ஒரு பகுதிதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. இறந்த பிறகு கியாமத் நாள் வரை எந்த ஒரு வாழ்க்கையும் இல்லையென்றால் ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாருக்கு காலையிம், மாலையிம் எவ்வாறு வேதனை அளிக்க முடியும்?

இது கப்ருடைய வேதனையைக் குறிக்காது. மறுமையில் அளிக்கப்படும் வேதனையைத்தான் குறிக்கும் என்று சிலர் வாதிட முற்படலாம். ஆனால் மறுமை நாளில் ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாரைக் கடுமையான வேதனையில் புகுத்துங்கள் என்று கூறப்படும் என்றால் அது வரை காலையிம், மாலையிம் செய்யப்பட்ட வேதனை எது? அது வரை அந்த வேதனை எப்போது செய்யப்பட்டது? இதற்கு விளக்கமாகத்தான் நபி(ஸல்) அவர்கள் கப்ருடைய வேதனையைப் பற்றி விளக்கம் அளித்துள்ளனர். இத்தகைய ஹதீஸ்கள் யாவும், இவ்வசனத்தின் விளக்கவுரைகளே தவிர முரணானவை அல்ல.